செய்தி வெளியீடு எண்: 07 நாள்: 07.01.2022

பத்திரிகை செய்தி

கிண்டி அரசினர் மகளிர் ஐ.டி.ஐ–யில் 15.01.2022 வரை நேரடி சேர்க்கை

சென்னை, கிண்டி: அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு உதவி பெறும் தொழிற்பயிற்சி நிலையங்களில் 2021 ஆண்டுக்கான மாணவர் நேரடி சேர்க்கை பொறியியல் அல்லாத கீழ்காணும் தொழிற்பிரிவுகளில் நடைபெற்று வருகிறது. அதனால் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர விரும்பும் மாணவிகள் உடனடியாக தொழிற்பயிற்சி நிலையத்தை அணுகுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறார்கள்.

கல்வி தகுதி : 8, 10–ம் வகுப்பு தேர்ச்சி. மகளிருக்கு வயது வரம்பு இல்லை. ஆவணங்கள் (மாற்றுச் சான்றிதழ், மதிப்பெண் சான்றிதழ், புகைப்படம் மற்றும் ஆதார் அட்டை நகல்).

கிண்டி மகளிர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் உள்ள தொழிற்பிரிவுகள் : Fashion Design Technology, Computer Aided Embroidery and Designing, Sewing Technology, Surface Ornamentation techniques (Embroidery), மற்றும் Stenographer and Secretarial Assistant (English).

தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி முடித்தவுடன், முன்னணி நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெறும் வாய்ப்புள்ளதால் மாணவிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி கொள்ளலாம். மேலும் தொழிற்பழகுநர் பயிற்சியும் பெற வாய்ப்புள்ளது. இது தொடர்பான விவரங்களை 044–22510001, 9499055652 தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம் என சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் ஜெ. விஜயா ராணி, இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை–01